ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/17 - 2020 ජූනි මස 24 වැනි බදාදා - 2020.06.24

2181/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தினை அமைத்தல்

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் “செழிப்பான நோக்கம்” என்ற எண்ணக்கருவின் பிரகாரம் வறுமைக்கோட்டின் கீழுள்ள இலங்கைப் பிரஜைகளின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்கில் குறைந்த கல்வித் தகைமையுடைய, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் எழியவர்கள் போன்ற இலங்கைப் பிரஜைகளுக்கு 100,000 பேருக்கு முறையான பயிற்சியளிப்பதன் ஊடாக சிறந்த பொருளாதார நிலைகொண்ட புதிய அணியாக உருவெடுப்பதற்காக இலக்கம் PS/SP/Sec./Cab.P மற்றும் 2019 திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அப/19/3388/201/004 இலக்கமுடைய 2019 திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் **“பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்”** 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சின் விடயதானத்தின் கீழ் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அனைத்து மக்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

**உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுகின்ற அடிப்படைப் பணிகள்**

1. அரச சொத்துக்களை பராமரித்தல் மற்றும் சிவில் கடமைகளுக்காக அரச முகவர் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
2. காவற் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
3. டெங்கு மற்றும் ஏனைய தொற்று நோய் ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

1A - G 032389 - 22 (2020/06)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. வனவிலங்குகளின் அச்சுறுத்தல் காணப்படும் பிரதேசங்களின் சொத்துக்கள், கமநலசேவைகள் வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக உதவி புரியும் அணியாக செயற்படல்

5. இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

6. வன விதான அபிவிருத்தி மற்றும் இயற்கை சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

7. கிராம உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, உணவு களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

8. வீட்டுத்தோட்டம், பண்ணைகள் மற்றும் ஏனைய ஜீவனோபாய அபிவிருத்தி செயற்பாடுகளை விருத்தி செய்யும் போது கொள்கை வெளியீட்டில் இலக்காகக் கொண்ட திவிநெகும 100,000 குடும்பங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

9. விவசாய பண்ணை இடங்களை உருவாக்குதல், பூமி அலங்காரம் மற்றும் அது தொடர்பான செயற்பாடு களில் சிவில் பணிகளை நிறைவேற்றல்

10. கடற்கரை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு உதவுதல்

11. மக்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக துணை சிவில் படையாக ஒத்துழைப்புகளை வழங்குதல்

12. வர்த்தக அடிப்படையில் விவசாய பண்ணைகளை முகாமைத்துவப்படுத்தல்

13. வெளிநாட்டு ஊழியர்களின் பயன்பாட்டினை குறைப்பதற்காக கட்டுமான பணிகளுக்கு மனிதவளங்களை வழங்குதல்

14. விடயப்பொறுப்பு அமைச்சரினால் அல்லது அரசினால் நிறைவு செய்கின்ற விசேட பணிகளில் ஈடுபடல்

முகவரி

பணிப்பாளர் நாயகம்,
பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்,
இல. 17,
செதம் வீதி,
கொழும்பு 01,
2020 யூன், 23.

அமைச்சரவை உத்தரவிற்கு அமைவாக,

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

07 - 266

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.